**சுருக்கம்**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 (தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 21/1994) – நீலகிரி மாவட்டம் – உதகமண்டலம் மற்றும் கூடலூர் ஊராட்சி ஒன்றியங்களை பிரித்து குந்தா மற்றும் பந்தலூர் என இரண்டு புதிய ஊராட்சி ஒன்றியங்கள் உருவாக்குதல் – தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 (தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 21/1994) பிரிவு 15 உட்பிரிவு (1)-ன்படி அறிவிக்கை – வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் [பரா-2(1)] துறை**

அரசாணை (நிலை)எண்.340

நாள்.04.12.2025.
விசுவாவசு, கார்த்திகை –18
திருவள்ளுவர் ஆண்டு 2056
படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.142, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் [ப.ரா-2(1)] துறை, நாள்.23.11.2023.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை-15, அவர்களின் கடித ந.க.எண்.69023/2024/ப.ரா-1.1, நாள்.22.10.2025.

-------

ஆணை:

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், ஊரக உள்ளாட்சி அமைப்புகளை மறுசீரமைப்பு செய்வது தொடர்பாக அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்கள் தலைமையில் மாநில அளவிலான உயர்மட்டக்குழு (High Level Committee) அமைக்கப்பட்டது. அதனடிப்படையில் பல்வேறு தேதிகளில் கூடி இப்பொருண்மைகள் மீது விரிவான ஆலோசனைகள் / விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டது. மேலும், ஊரக உள்ளாட்சி அமைப்புகளை மறுசீரமைப்பு செய்தல் தொடர்பாக அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலி காட்சி மூலமாக ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன. அதனைத் தொடர்ந்து ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மறுசீரமைப்பு தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் உரிய கருத்துருக்கள் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவில் கீழ்காணும் விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது:

நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து, பெறப்பட்ட கருத்துருவில் நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் மற்றும் கூடலூர் ஊராட்சி ஒன்றியங்களை பல்வேறு காரணிகளின் அடிப்படையில் இரண்டாக பிரிப்பதற்கு கீழ்க்காணுமாறு விவரங்கள் பெறப்பட்டுள்ளது. மேலும் கோத்தகிரி மற்றும் குன்னூர் ஊராட்சி ஒன்றியங்கள் தற்போது பிரிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது:

1. <u>நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் ஊராட்சி ஒன்றியம்:</u>

உதகமண்டலம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 38 கிராம ஊராட்சிகளில் 424 குக்கிராமங்கள் உள்ளன. உதகமண்டலம் ஊராட்சி ஒன்றியம் மலைப்பகுதிகளாக இருப்பதாலும் போதுமான சாலை வசதி இல்லாததாலும் மற்றும் குக்கிராமங்கள் அதிக அளவில் இருப்பதாலும் ஒன்றிய அலுவலகத்தை அணுகுவதற்கு கிராம மக்களுக்கு போதிய வசதிகள் இல்லாத காரணத்தாலும் உதகமண்டலம் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து உதகமண்டலம் ஊராட்சி ஒன்றியத்தில் 26 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி ஒரு ஊராட்சி ஒன்றியமாகவும் மற்றும் 12 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி குந்தா ஊராட்சி ஒன்றியம் என்ற புதிய ஊராட்சி ஒன்றியத்தை உருவாக்கி இரண்டு ஊராட்சி ஒன்றியங்களாக பிரிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. <u>நீலகிரி மாவட்டம், கூடலூர் ஊராட்சி ஒன்றியம்:</u>

கூடலூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 22 கிராம ஊராட்சிகளில் 343 குக்கிராமங்கள் உள்ளன. கூடலூர் ஊராட்சி ஒன்றியம் மலைப்பகுதிகளாக இருப்பதாலும் போதுமான சாலை வசதி இல்லாததாலும் மற்றும் பல குக்கிராமங்கள் இருப்பதாலும் ஒன்றிய அலுவலகத்தை அணுகுவதற்கு கிராம மக்களுக்கு போதிய வசதிகள் இல்லாத காரணத்தாலும் கூடலூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து கூடலூர் ஊராட்சி ஒன்றியத்தில் 9 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி ஒரு ஊராட்சி ஒன்றியமாகவும் மற்றும் 13 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி பந்தலூர் ஊராட்சி ஒன்றியம் என்ற புதிய ஊராட்சி ஒன்றியத்தை உருவாக்கி இரண்டு ஊராட்சி ஒன்றியங்களாகப் பிரிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. எனவே, நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகமண்டலம் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து உதகமண்டலம் ஊராட்சி ஒன்றியத்தில் 26 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி ஒரு ஊராட்சி ஒன்றியமாகவும் மற்றும் **குந்தா ஊராட்சி ஒன்றியம்** என்ற புதிய ஊராட்சி ஒன்றியத்தை உருவாக்கி 12 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி மற்றொரு புதிய ஊராட்சி ஒன்றியமாகப் பிரித்திடவும், கூடலூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து கூடலூர் ஊராட்சி ஒன்றியத்தில் 9 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி ஒரு ஊராட்சி ஒன்றியமாகவும் மற்றும் **பந்தலூர் ஊராட்சி ஒன்றியம்** என்ற புதிய ஊராட்சி ஒன்றியத்தை உருவாக்கி அதில் 13 கிராம

ஊராட்சிகளை உள்ளடக்கி மற்றொரு புதிய ஊராட்சி ஒன்றியமாகப் பிரித்திடவும் நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையின் அடிப்படையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் பரிந்துரை செய்து உரிய கருத்துருவினை அரசுக்கு அனுப்பி உரிய ஆணை வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

4. மேற்காண் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்க முடிவு செய்து, நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகமண்டலம் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து உதகமண்டலம் ஊராட்சி ஒன்றியத்தில் 26 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி ஒரு ஊராட்சி ஒன்றியமாகவும் மற்றும் 12 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி **குந்தா என்ற புதிய ஊராட்சி ஒன்றியமாக** உருவாக்கியும் மற்றும் கூடலூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து கூடலூர் ஊராட்சி ஒன்றியத்தில் 9 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி ஒரு ஊராட்சி ஒன்றியமாகவும் மற்றும் 13 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி **பந்தலூர் என்ற புதிய ஊராட்சி ஒன்றியமாக** உருவாக்கியும் அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாணையினைத் தொடர்ந்து, 04.12.2025 நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் பின்னிணைப்பில் கண்டுள்ள அறிவிக்கைகளை (I & II) தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெளியிடுமாறு பணிமேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–75 அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ககன்தீப் சிங் பேடி**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

**<u>பெறுநர்</u>**

பணிமேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–75
(04.12.2025 நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் அறிவிக்கை வெளியிட)
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15.
மாவட்ட ஆட்சித்தலைவர், நீலகிரி மாவட்டம்.
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள் (சென்னை மாவட்டம் நீங்கலாக).

**<u>நகல்</u>**

முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை–9.
மாண்புமிகு ஊரக வளர்ச்சி அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
தலைமைச்செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச்செயலர், தலைமைச் செயலகம், சென்னை–9.
நிதித்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.

சட்டத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை
தனிச்செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ப. ப. [signature] 4.12.2025
பிரிவு அலுவலர்.

[signature] 4/12/2025

## பின்னிணைப்பு.

## அறிவிக்கை – I.

1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 15–ஆம் பிரிவின், (1)–ஆம் உட்பிரிவால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு உதகமண்டலம் ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்தின் பகுதியை பிரித்து தனி ஊராட்சி வளர்ச்சி வட்டாரப் பகுதியாக விளங்க இருக்கும் அதாவது குந்தா ஊராட்சி வளர்ச்சி வட்டாரம் மற்றும் மேற்சொன்ன ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்திற்காக ஒரு ஊராட்சி ஒன்றியம் அதாவது குந்தா ஊராட்சி ஒன்றியத்தை அமைத்துருவாக்குவதற்கு கீழேயுள்ள பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள வட்டார பகுதிகளை விளம்புகை செய்வதற்கு தமிழ்நாடு ஆளுநர் அவர்களுடைய நோக்கத்தை ஈங்கிதனால் அறிவிக்கிறார். மேற்காணும் ஊராட்சி ஒன்றியத்தின் அடிப்படையில், வரும் தேர்தலுக்கு வார்டுகள் பிரிக்கப்படும்.

2. அந்த உள்ளூர் வட்டாரப் பகுதியில் குடியிருந்து வருகின்ற எவரும் தமிழ்நாடு அரசிதழில் இந்த அறிவிக்கை வெளியிடப்பட்டதிலிருந்து ஆறு வாரங்களுக்குள் இந்த அறிவிக்கை குறித்த மறுப்பினை தெரிவிக்க விரும்பினால் அவர் எழுத்து மூலம் அரசுக்கு தெரிவிக்க வேண்டும். அவ்வாறு அந்த உள்ளூர் வட்டார பகுதியில் குடியிருந்து வருகின்ற யாரிடமிருந்தும் மேலே கூறப்படும் காலக்கெடுவுக்குள் மறுப்பு ஏதும் பெறப்பட்டால் அதனை அரசு உரிய பரிசீலனை செய்யும். மறுப்புகள் ஏதும் இருப்பின் அதனை எழுத்து மூலமாக அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தலைமைச் செயலகம், சென்னை– 600 009 என்ற முகவரியிட்டு அனுப்பிவைத்தல் வேண்டும்.

## அட்டவணை–I

**உதகமண்டலம் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து 26 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி உதகமண்டலம் ஊராட்சி ஒன்றியமாகவும் மற்றும் 12 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி குந்தா புதிய ஊராட்சி ஒன்றியம் உருவாக்குதல்:**

| ஊராட்சி ஒன்றியத்தின் பெயர். (1) | கிராம ஊராட்சிகளின் பெயர். (2) |
|---|---|
| உதகமண்டலம் | 1. கக்குச்சி. |
| | 2. அஜ்ஜூர். |
| | 3. டி. மணியட்டி. |
| | 4. தும்மனட்டி. |
| | 5. கெந்தொரை. |
| | 6. மைனலை. |

| | |
|---|---|
| | 7. பரலட்டி. |
| | 8. உல்லத்தி. |
| | 9. தலைகுந்தா. |
| | 10. ஆடாசோலை. |
| | 11. தொட்டபெட்டா. |
| | 12. தூனேரி. |
| | 13. அணிக்கொரை. |
| | 14. தொரையட்டி. |
| | 15. கடநாடு. |
| | 16. சின்னகுன்னூர். |
| | 17. தாவணி. |
| | 18. எப்பநாடு. |
| | 19. இடுஹட்டி. |
| | 20.கூக்கல். |
| | 21. கூக்கல்தொரை. |
| | 22.நஞ்சநாடு. |
| | 23.குருத்துக்குளி. |
| | 24.மேல்கௌஹட்டி |
| | 25.எம். பாலடா. |
| | 26.போர்த்தியாடா. |
| குந்தா | 1. பாலகொலா. |
| | 2. தேவர்சோலை. |
| | 3. தங்காடு. |
| | 4. தேனாடு. |
| | 5. இத்தலார். |
| | 6. கல்லக்கொரை. |
| | 7. நுந்தளா. |
| | 8. சுரேந்தர்நகர். |
| | 9. முள்ளிகூர். |
| | 10. எமரால்டு. |
| | 11. மேல்குந்தா. |
| | 12. கிண்ணகொரை. |

ககன்தீப் சிங் பேடி
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

//உண்மை நகல்//

ப. ப. Dion 4.12.2025

பிரிவு அலுவலர்.

4.12.2025

## அறிவிக்கை – II.

1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 15–ஆம் பிரிவின், (1)–ஆம் உட்பிரிவால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு கூடலூர் ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்தின் பகுதியை பிரித்து தனி ஊராட்சி வளர்ச்சி வட்டாரப் பகுதியாக விளங்க இருக்கும் அதாவது பந்தலூர் ஊராட்சி வளர்ச்சி வட்டாரம் மற்றும் மேற்சொன்ன ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்திற்காக ஒரு ஊராட்சி ஒன்றியம் அதாவது பந்தலூர் ஊராட்சி ஒன்றியத்தை அமைத்துருவாக்குவதற்கு கீழேயுள்ள பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள வட்டார பகுதிகளை விளம்புகை செய்வதற்கு தமிழ்நாடு ஆளுநர் அவர்களுடைய நோக்கத்தை ஈங்கிதனால் அறிவிக்கிறார். மேற்காணும் ஊராட்சி ஒன்றியத்தின் அடிப்படையில், வரும் தேர்தலுக்கு வார்டுகள் பிரிக்கப்படும்.

2. அந்த உள்ளூர் வட்டாரப் பகுதியில் குடியிருந்து வருகின்ற எவரும் தமிழ்நாடு அரசிதழில் இந்த அறிவிக்கை வெளியிடப்பட்டதிலிருந்து ஆறு வாரங்களுக்குள் இந்த அறிவிக்கை குறித்த மறுப்பினை தெரிவிக்க விரும்பினால் அவர் எழுத்து மூலம் அரசுக்கு தெரிவிக்க வேண்டும். அவ்வாறு அந்த உள்ளூர் வட்டார பகுதியில் குடியிருந்து வருகின்ற யாரிடமிருந்தும் மேலே கூறப்படும் காலக்கெடுவுக்குள் மறுப்பு ஏதும் பெறப்பட்டால் அதனை அரசு உரிய பரிசீலனை செய்யும். மறுப்புகள் ஏதும் இருப்பின் அதனை எழுத்து மூலமாக அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தலைமைச் செயலகம், சென்னை– 600 009 என்ற முகவரியிட்டு அனுப்பிவைத்தல் வேண்டும்.

### அட்டவணை–II

**கூடலூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து 9 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி கூடலூர் ஊராட்சி ஒன்றியமாகவும் மற்றும் 13 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி பந்தலூர் புதிய ஊராட்சி ஒன்றியம் உருவாக்குதல்:**

| ஊராட்சி ஒன்றியத்தின் பெயர். (1) | கிராம ஊராட்சிகளின் பெயர். (2) |
|---|---|
| கூடலூர் | 1. நெலாக்கோட்டை. |
| | 2. பிதர்காடு. |
| | 3. சோலாடி. |
| | 4. பாக்கனா. |
| | 5. குன்னலாடி. |
| | 6. மசினகுடி. |
| | 7. மாவனள்ளா. |
| | 8. ஸ்ரீமதுரை. |
| | 9. முதுமலை. |
| பந்தலூர் | 1. சேரம்பாடி. |

| | |
|---|---|
| | 2. சேரங்கோடு. |
| | 3. கையுண்ணி. |
| | 4. கப்பாலா. |
| | 5. பனஞ்சிரா. |
| | 6. எருமாடு. |
| | 7. போத்துக்கொல்லி. |
| | 8. கல்லிச்சால். |
| | 9. கொளப்பள்ளி. |
| | 10. அய்யன்கொல்லி. |
| | 11. அம்மங்காவு. |
| | 12. அம்பலமூலா. |
| | 13. அம்பலவயல். |

**ககன்தீப் சிங் பேடி**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.

## APPENDIX.

## NOTIFICATION-I.

In exercise of the powers conferred by sub-section (1) of section 15 of the Tamil Nadu Panchayats Act, 1994 (Tamil Nadu Act 21 of 1994), the Governor of Tamil Nadu hereby notifies his intention to declare the local areas specified in the Table below, now part of Udhagamandalam Panchayat Development Block, to be a separate Panchayat Development Block, namely, Kundha Panchayat Development Block and to constitute for the said Panchayat Development Block, a Panchayat Union, namely, Kundha Panchayat Union. Based on the above constitution of Kundha Panchayat Union, wards will be divided for the next ordinary election.

2. Any inhabitant of the said local area desiring to object to anything contained in this Notification may submit his objection in writing to the Government within six weeks from the date of publication of this Notification in the Tamil Nadu Government Gazette, and that any objection which may be received from such inhabitant of that local area with respect thereto before expiry of the aforesaid period will be duly considered by the Government. Objections in writing, if any, should be addressed to the Additional Chief Secretary to Government, Rural Development and Panchayat Raj Department, Secretariat, Chennai –600 009:-

### THE TABLE

| Name of the Panchayat Union. (1) | Name of the Village Panchayat. (2) |
|---|---|
| Udhagamandalam | 1. Kagguchi. |
| | 2. Ajjoor. |
| | 3. T. Manihatty. |
| | 4. Thummanatty. |
| | 5. Kenthorai. |
| | 6. Mynalai. |
| | 7. Baralatty. |
| | 8. Hullathy. |
| | 9. Thalakundha. |
| | 10. Adasholai. |
| | 11. Doddabetta. |
| | 12. Thuneri. |
| | 13. Anikorai. |
| | 14. Thoraihatty. |
| | 15. Kadanad. |
| | 16. Chinna coonoor. |
| | 17. Dhavani. |
| | 18. Ebbanad. |
| | 19. Iduhatty. |
| | 20. Kookal. |

| | |
|---|---|
| | 21. Kookalthorai. |
| | 22. Nanjanad. |
| | 23. Kuruthukuli. |
| | 24. Melcowhatty. |
| | 25. M.Palada. |
| | 26. Porthiyada. |
| **Kundha** | 1. Balacola. |
| | 2. Devershola. |
| | 3. Thangadu. |
| | 4. Denadu. |
| | 5. Ithalar. |
| | 6. Kallakkorai. |
| | 7. Nunthala. |
| | 8. Surender nagar. |
| | 9. Mulligoor. |
| | 10. Emarald. |
| | 11. Mel Kundha. |
| | 12. Kinnakorai. |

**GAGANDEEP SINGH BEDI**
**Additional Chief Secretary to Government.**

// TRUE COPY //

Section Officer.

## NOTIFICATION-II.

In exercise of the powers conferred by sub-section (1) of section 15 of the Tamil Nadu Panchayats Act, 1994 (Tamil Nadu Act 21 of 1994), the Governor of Tamil Nadu hereby notifies his intention to declare the local areas specified in the Table below, now part of Gudalur Panchayat Development Block, to be a separate Panchayat Development Block, namely, Pandalur Panchayat Development Block and to constitute for the said Panchayat Development Block, a Panchayat Union, namely, Pandalur Panchayat Union. Based on the above constitution of Pandalur Panchayat Union, wards will be divided for the next ordinary election.

2. Any inhabitant of the said local area desiring to object to anything contained in this Notification may submit his objection in writing to the Government within six weeks from the date of publication of this Notification in the Tamil Nadu Government Gazette, and that any objection which may be received from such inhabitant of that local area with respect thereto before expiry of the aforesaid period will be duly considered by the Government. Objections in writing, if any, should be addressed to the Additional Chief Secretary to Government, Rural Development and Panchayat Raj Department, Secretariat, Chennai –600 009:-

## THE TABLE

| **Name of the Panchayat Union.<br>(1)** | **Name of the Village Panchayat.<br>(2)** |
|---|---|
| **Gudalur** | 1. Nellakotta. |
| | 2. Bitherkad. |
| | 3. Choladi. |
| | 4. Pakkana. |
| | 5. Kunnaladi. |
| | 6. Masinagudi. |
| | 7. Mavanallah. |
| | 8. Sreemadurai. |
| | 9. Mudumalai.<br>10. |
| **Pandalur** | 1. Cherambadi. |
| | 2. Cherangode. |
| | 3. Kaiyunni. |
| | 4. Kappala. |
| | 5. Panachira. |
| | 6. Erumadu. |
| | 7. Pothukolli. |
| | 8. Kallichal. |
| | 9. Kolapalli. |
| | 10. Ayyankolli. |

| | |
|---|---|
| | 11. Ammankavu. |
| | 12. Ambalamoola. |
| | 13. Ambalavayal. |

**GAGANDEEP SINGH BEDI**
**Additional Chief Secretary to Government.**

// TRUE COPY //

Section Officer.